கருக்கம்

தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை – பத்திரிக்கையாளர் ஓய்வூதியம் – தமிழ்நாட்டில் உள்ள ஓய்வு பெற்ற பத்திரிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பத்திரிக்கையாளர் ஓய்வூதியம் ரூ.5,000/–லிருந்து ரூ.6,000/– ஆக உயர்த்தி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்:191 நாள்: 14.09.2011

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.147. செய்தி மற்றும் சுற்றுலா (செய்தி வெளியீடு)த் துறை, நாள்.03.04.1986.
2. அரசாணை (நிலை) எண்.98, செய்தி மற்றும் சுற்றுலா (செய்தி வெளியீடு)த் துறை, நாள்.17.04.1997
3. அரசாணை (நிலை) எண்.151, செய்தி மற்றும் சுற்றுலா (செய்தி வெளியீடு)த் துறை, நாள்.13.07.2000
4. அரசாணை (நிலை) எண்.236, செய்தி மற்றும் சுற்றுலா (நிர். 4)த் துறை, நாள்.03.10.2006
5. அரசாணை (நிலை) எண். 293, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 16.07.2010.

-----

ஆணை:

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில், பத்திரிக்கைத் துறையில் நீண்டகாலமாக பணியாற்றி, சமுதாய விழிப்புணர்விற்கு பாடுபட்டு, பணியிலிருந்து ஓய்வுபெற்று, வறுமை நிலையில் உள்ள பத்திரிக்கையாளர்களின் சமூகப் பணியைக் கருத்தில் கொண்டு நலிவடைந்த பத்திரிக்கையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க வகை செய்து மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 14.04.1986 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது மாதம் ரூ.250/– ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

2. பின்னர் படிப்படியாக உயர்த்தப்பட்டு பார்வை 5–ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின் படி பத்திரிக்கையாளர் ஓய்வூதியம் ரூ.4,000/–லிருந்து 5,000/–ஆக உயர்த்தி வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

3. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அமைச்சர் அவர்கள் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஆய்வுக் கூட்டத்தை 15.07.2011 அன்று நடத்தினார்கள். அக்கூட்டத்தில் பத்திரிக்கையாளர் ஓய்வூதியத்தை ரூ.5,000/– லிருந்து ரூ.6,000/– (ரூபாய் ஆறாயிரம்) ஆக உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள். மேற்காணும் கருத்துரு, அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர் பத்திரிக்கையாளர் ஓய்வூதியம் ரூ.5,000/–லிருந்து ரூ.6,000/– (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) ஆக உயர்த்தி இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதல் மாதந்தோறும் வழங்க ஆணையிடப்படுகிறது. இந்த உயர்வு ஏற்கனவே பத்திரிக்கையாளர் ஓய்வூதியமாக ரூ.5,000/– பெறுபவர்களுக்கும் பொருந்தும்.

த.பி.பா.,

4. இச்செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

" 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் –60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் –102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் –I திட்டத்தில் சேராதது – AH தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதிய சலுகை வழங்கும் திட்டம் – 27 ஓய்வூதியங்கள் – 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்'' (து.தொ.கு. 2235 60 102 AH 2750)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினத்தினை மேற்கொள்ள கூடுதல் நிதியொதுக்கம் 2011–2012ம் ஆண்டிற்கான திருத்த/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினைப்பெற்று வழங்கிட ஆணையர்/ செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலே பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2011–2012–ம் ஆண்டிற்கான திருத்த/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர்/செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.46256/தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை /நாள்.13.09.2011 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 536 (ஐநூற்று முப்பத்தாறு) –ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மூ.இராசாராம்,
அரசு செயலாளர்.

பெறுநர் :
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
ஆணையர்/செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
மாநில கணக்காயர் (கணக்குகள் (ம) பணிவரவு) சென்னை–18
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 35/18
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், ஈ.வி.கே.சம்பத் மாளிகை, சென்னை–6
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –5/35/6
நகல்
நிதி( தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி )த்துறை
நிதி (வரவு செலவு பொது.I)த்துறை / நிதி (வரவு செலவு பொது.II)த்துறை
தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (வரவு செலவு)த்துறை
செய்தி–ஒலிபரப்பு அமைச்சகம், புதுதில்லி
அனைத்து துறை செயலாளர்கள்
அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்
சென்னை நிருபர்கள் சங்கம், சென்னை–2
தலைவர், சென்னை பத்திரிக்கையாளர் சங்கம், சென்னை
தமிழ் வளர்ச்சி ,அறநிலையங்கள் மற்றும் செய்தி ( வரவு செலவு)
மற்றும் ( கணக்குகள்) த்துறை, சென்னை–9
இருப்புக்கோப்பு/உதிரி நகல்கள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்